**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சரவணன் என்பவரின் மகள் செல்வி. கற்பகம், பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளானது– ஏரியில் மூழ்கி இறந்தது– முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/– நிதியுதவி வழங்குதல்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(பத்தாண்டு) எண்.30

நாள்:12–09–2014
ஜய, ஆவணி 27,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.8, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 14–05–2010.
2. கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண்.ந.க.சி3/100/2014, நாள் 24.2.2014.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் எண்.2284/மா.தி.ந.2.2/2014, நாள் 16.6.14.

------

**ஆணை:**

கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், அரசுக்கு எழுதியுள்ள மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், விருத்தாசலம் வட்டம், ஊமங்கலம், கிராமத்தைச் சேர்ந்த திரு. சரவணன் என்பவரின் மகள் செல்வி. கற்பகம் (வயது 21) (உடல் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி) என்பவரை, 26.01.2014 அன்று மேற்படி கிராமத்தைச் சேர்ந்த 6 நபர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகவும், இச்சம்பவம் தொடர்பாக, ஊமங்கலம் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில், 11.02.2014 அன்று தாண்டவன்குப்பம் தெர்மல்–1 அருகில் உள்ள ஏரிக்கு தனது தாயாருடன் குளிக்க சென்றபோது, செல்வி கற்பகம் நீரில் மூழ்கி இறந்ததாகவும், இது தொடர்பாக, நெய்வேலி தெர்மல் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் 12.02.2014 அன்று, குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, ஊமங்கலம் கிராமத்தில் அன்றே அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட நபரின் தாயார் திருமதி சாந்தி, க/பெ. சரவணன் என்பவர் தனது குடும்பத்தினருக்கு தமிழக அரசின் நிவாரணமும், குடும்ப நபர் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்கிட கோரி மனு செய்துள்ளதாகவும் தெரிவித்து, மனுதாரரின் குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண நிதி வழங்க கடலூர் மாவட்ட ஆட்சியர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரும், பாதிப்புக்கு உள்ளான பெண்ணின் குடும்பத்தாருக்கு கருணை அடிப்படையில் சிறப்பினமாக கருதி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/– நிதி உதவி வழங்கிட நடவடிக்கை எடுக்கலாம் என அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. கடலூர் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்று, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை பத்தி 6(V) (C)க்கு சிறப்பினமாக கருதி விலக்களித்து, கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், ஊமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சரவணன் அவர்களின் மகள் செல்வி. ச. கற்பகம் (மாற்றுத் திறனாளி) என்ற பெண், பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டு, அதன்பின் ஏரியில் மூழ்கி இறந்தமையால், அன்னாரின் குடும்பத்திற்கு கருணை அடிப்படையில், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நிவாரண நிதியுதவி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) காசோலையை, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்குமாறு, அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (மு.பொ.நி.நி)துறை, சென்னை–9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேற்படி நிவாரணத் தொகையை காசோலையாகவோ அல்லது அஞ்சலக சேமிப்புக் கணக்கு மூலமாகவோ உரிய நடைமுறை விதிகளின்படி, கடலூர் மாவட்டம் விருத்தாச்சலாம் வட்டம், ஊமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சரவணன் அவர்களின் மகள் செல்வி. ச. கற்பகம் (மாற்றுத் திறனாளி) என்ற பெண்ணின் குடும்பத்திற்கு வழங்கி, குடும்பத்தாரிடம் வரிவில்லையிட்ட பற்றுச் சீட்டை பெற்று, அதில் வட்டாட்சியர் பதவிக்கு குறையாத அலுவலரின் சான்றொப்பதுடன், உரிய அலுவலக முத்திரையுடனும், அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி(மு.பொ.நி.நி) துறை, சென்னை–9 அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறும், அதன் நகலினை அரசின் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு அனுப்பி வைக்குமாறும், கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.48800/CMPRF/2014, நாள் 08.09.14– ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி(மு.அ.பொ.நி.நி)த் துறை, சென்னை–9 (3 நகல்கள்) (தனிநபர் மூலமாக)
மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்மாவட்டம்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் தனி அலுவலர், சென்னை–9.
திரு. சரவணன், ஊமங்கலம், விருத்தாச்சலம் வட்டம், கடலூர் மாவட்டம். (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மூலமாக)
**நகல்:**
நிதித் துறை, சென்னை–9.
இ.கோ/உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.